
உ

சிவமயம்

# தில்லை நாதம்



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை,
வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கொழும்பில் வசித்த

## கலாபூஷணம்

## அமரர் சிவஸ்ரீ சதாசிவ ஐயர் தில்லைநாதன் ஐயா

# நினைவு மலர்

04. 11. 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



வெள்ளைப் புற்றடி

வீரகத்தி விக்னேஸ்வர உற்சவ மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் உயிர் நாடியான நீங்கள்
அன்புக் கணவனாகி பாசமிகு தந்தையாகி நம்
வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் உற்ற துணையாக விளங்கி
அன்போடும், பண்போடும், அறநெறியோடும் நாம்
இத்தரணியில் வாழ வழி வகுத்த எம் அன்புத் தெய்வமே
உங்களின் பிரிவு துயரத்தால் துவண்டிருக்கும் நாம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்தித்துக் கொண்டு
உங்கள் அன்பிற்கும், பண்பிற்கும் பாசத்திற்குமாக
இதய பூர்வமாக இம்மலரை தங்கள்
பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.



இவ்வண்ணம்
குடும்பத்தினர்.
38, அரசடி பிள்ளையார் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் - கலாபூஷணம்

# சிவஸ்ரீ சதாசிவ ஐயர் தில்லைநாதன் ஐயா

**தோற்றம் - 12.06.1945 மறைவு - 24.10.2017**

திதி நிர்ணயப்பா

சீராகும் ஏவிளம்பி சேரைப்பசி எட்டதனில்
நீராகும் பூர்வபக்க ஸ்கந்த பஞ்சமியில் - பேராகும்
சதாசிவம் தில்லைநாதன் ஐயாவைச் சகம்நீத்து
[illegible] காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## பஞ்சபுராணம்

### தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட் பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய
பெம்மான் இவ னன்றே.

### திருவாசகம்

கண்களிரண்டும் அவன் கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகையார்கள் தம்வாழ்விலென் வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு
மறந்திடும் ஆகாதே
மாலறியா மலர்ப் பாதமிரண்டும்
வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலோடாடல்
பயின்றிடும் ஆகாதே
பாண்டி நன்னாடுடையான் படையாட்சிகள்
பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படும் ஆயிடிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளி வளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்
பக்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோனடி
யோமுக்கு கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# மண்கும்பான் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் ஊஞ்சல்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீருலவோர் கைலைபல வாய்வந் தென்னத்
திகழுமண்கும் பானிலுள வெள்ளைப் புற்றென்
பேருலவு பதியிலெழுந் தருளி யன்பர்
பெறவிரும்பும் வரமுதவும் பெருமா னாக
வேருலவு கைலைவரை யிறையும் பொன்னா
மிமயவரை யிறைவியுமின் புடனே தந்த
காருலவு மிபமுகநின் மேற்பொன் னூசல்
கழற்நின்றன் றிருவடிகள் காப்புந் தானே.

இருக்குமுத னான்மறைகள் கால்க ளாக
விலகுமுப நிடதமுறுஞ் சட்ட மாகத்
திருக்கறுசை வாகமமே பலகை யாகத்
திகழுமுபா கமங்கடரும் விட்ட மாகத்
தருக்கறுபா னான்குகலை கயிற தாகத்
தம்வடிவா சனமாகத் தருமூ சற்கண்
மருக்கமழு மலர்ப்பொழில்சூழ் மண்கும் பானில்
வரதவிக்கி னேசுரரே யாடீ ரூஞ்சல். (1)

தந்தைகைம்மா துளம்பழத்தைக் குகமுந் நீயுந்
தருகவென வவர்க்ஷணத்தி லுலகைச் சுற்றி
வந்தவர்க்கே யெனவிரைய மயிலி லேறி
வலம்வருமு னுலகமுன்றன் வடிவே யென்று
முந்திவலம் வந்தரனைக் கனிகைக் கொண்ட
மூஷிகவா கன்மோத காஸ்த தேவர்
வந்துதொழு மருளிலகு மண்கும் பானில்
வரதவிக்கி னேசுரரேயாடீ ரூஞ்சல். (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிமிக வரனோடுமை சூதா டுங்காற்
கண்டதைச்சொல் லாதுவென்ற தானென் றேபொய்ச்
சாட்சிசொல வென்றவுமை சினந்து கண்ணில்
சர்ப்பமதா கெனப்பிறந்தே யரிகண் டோர்சொல்
சூட்சியதா லுனை வணங்க வனந்தன் சாபந்
தொலைத்தசுமு காயநம வென்றே தொண்டர்
மாட்சிபெறத் தொழுமெழில்சேர் மண்கும் பானில்
வரதவிக்கி னேசுரரே யாடீ ரூஞ்சல். (3)

மண்ணகத்தும் விண்ணகத்தும் வாழ்வா ரென்றும்
மனத்தினினைத்திடு மவைக ளிடையூ றின்றி
நண்ணவொளி ரேகதந்த விருதாண் மூன்று
மதநால்வா யைந்துகர நாதா வென்றே
திண்ணமுற நற்றேங்கா யுடைத்துப் போற்றிச்
சிந்தைசெய வந்தமுதற் றேவே பாலின்
வண்ணமுட னருளிலகு மண்கும் பானில்
வரதவிக்கி னேசுரரேயாடீ ரூஞ்சல். (4)

எந்தையருட் சத்திதனக் குமையே யாமு
மிபமுகப்பிள் ளையுமசுர ரிரியப் போரைத்
தந்தவயிற் கரக்குகமு மொன்றென் றுண்மை
தனையுரைத்தா ரிபமுகத்தெந் தாயே நீயு
மந்தமுத லற்றபர சிவமே பிள்ளை
யத்தனென லுபசார மாமென் றோர்ந்து
வந்தனைசெய் வோர்க்கதுவாம் மண்கும் பானில்
வரதவிக்கி னேசுரரேயாடீ ரூஞ்சல். (5)

பத்திர தன் புத்திரனாம் ராமச் சந்ரன்
பன்னிதனை மாவிலங்கைப் பதியாய் வாழ்ந்த
குந்திரமன் கொண்டதனாற் றேடி வாடிக்
குறைதவர்த்தா ளருண்மலையே யெனநின் பாத
பத்மமதை யர்ச்சனைசெய் திடவே சீதா
பதிநினைத்த படியருள்செய் பகவ யானை
வத்திரநல் வளமிலகு மண்கும் பானில்
வரதவிக்கி னேசுரரேயாடீ ரூஞ்சல். (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரனர்ச் சனைக்கிரங்கி யவன்பூங் காவுக்
சினியநறுங் காவிரிநீ ரிறைப்பா னெண்ணித்
தந்தரமார் காக்கைவடி வெடுத்தே கும்ப
சம்பவன்றன் கமண்டலத்தைக் கவிழ்த்தந் நீரிற்
சிந்துதுளி யொன்றிலதை நிரப்பிச் சோழ
தேயமெங்குங் காவிரியா றோடச் செய்த
மந்ரவடி வேமிளிரு மண்கும் பானில்
வரதவிக்கி னேசுரரே யாடீ ரூஞ்சல். (7)

அடிமலர்ச் சித்தஔவை சேர மானா
மரசர்செலக் கைலையங்ங னவரோ டேகக்
கடி தருச்சித் திடவிரையா தருச்சி மன்முன்
கைலைசெல்வா யெனவுரைத்துத் துதிக்கை யாலே
மிடிகெடுமா றெடுத்துமலை மேல்முன் விட்ட
வித்தகசோ டசகலையார் விதுநி லாப்போல்
வடிவமுட னருளிலகு மண்கும் பானில்
வரதவிக்கி னேசுரரேயாடீ ரூஞ்சல். (8)

வானவரை மானவரை வருத்தி மிக்க
வரத்தொடர சிருந்ததவ வலியோ னாகுந்
தானவனாங் கயமுகனைச் சமரிற் கொல்வான்
றநதமுய்க்க மூஷிகமா யவன்முன் மேவ
யானமென வூர்ந்துசுரர் நரர்கள் போற்ற
வெழுந்தருளூ மிறைவதந்தை யிருக்கும் வெற்பை
மானமிக மேலுயர்ந்த மண்கும் பானில்
வரதவிக்கி னேசுரரேயாடீ ரூஞ்சல். (9)

அந்தணரு மானினமு மறமும் வாழி
யருணீறு முருத்திரக்க மணியும் வாழி
யெந்தையரு ளாகமமும் மறையும வாழி
யிப்புவியுந் தப்பில்மழை முகிலும் வாழி
மந்திரமு மதைச்செபிக்கு மவரும் வாழி
மன்னவனு மன்னவன்செங் கோலும் வாழி
வந்தனைசெ யடியரொடு மண்கும் பானில்
வரதவிக்கி னேசுரதளியும் வாழி வாழி. (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரீக்கை

திருமேவிப முகமேவிய தேவே யெச்ச ரீக்கை
திகழ்சீர்மணற் குவைமேவிய கோவே யெச்ச ரீக்கை
கருமேவிய பாசாடவி களைவா யெச்ச ரீக்கை
கழறாவெனு மடியாருள விளைவே யெச்ச ரீக்கை (1)

ஓரைங்கர வேகாக்கா வுருவே யெச்ச ரீக்கை
யுலகம்முதற் றொழவந்தருள் குருவே யெச்ச ரீக்கை
யீரைங்கர விறை தந்திடு மீசா வெச்ச ரீக்கை
யெழிலார்மணற் குவையாம்பதி வாசா வெச்ச ரீக்கை (2)

பத்தோடிரு நான்காங்கண பதியே யெச்ச ரீக்கை
பரிவாற்றொழு மடியாரரு ணிதியே யெச்ச ரீக்கை
கொத்தார்மலர்க் குழல்வல்லவை கொழுனா வெச்ச ரீக்கை
குறுகாக்கய முகனோடுசெய் சமரா வெச்ச ரீக்கை (3)

பன்னாறிரு கரச்சண்முக முன்னே யெச்ச ரீக்கை
பலவாகிய கணர்கட்குமொர் மண்னே யெச்ச ரீக்கை
மன்னாறிருந் திடுமாமுடி வரதா வெச்ச ரீக்கை
மணலார்குவைப் பதிமேவருட் பாதா வெச்ச ரீக்கை (4)

# பராக்கு

தந்திமுக முற்றவரு ளெந்தாய் பராக்கு
தண்ணளியொ டாளவெளி வந்தாய் பராக்கு
அந்தமுத லற்றவரு ளீசா பராக்கு
அழகியம ணற்குவையில் வாசா பராக்கு (1)

ஆறிருகை வேள்முனுறு மண்ணா பராக்கு
அந்திமதி செங்கதிர்கொள் கண்ணா பராக்கு
வீறுபெறு பொன்னனைய மெய்யா பராக்கு
மேவுசெப மாலைதிகழ் கையா பராக்கு. (2)

வேதமுத லாகிமிளிர் நாதா பராக்கு
வேறுசம மற்றபர நீதா பராக்கு
காதுகணி லிக்கருள்செய் தாதா பராக்கு
காலையலர் செங்கமல பாதா பராக்கு. (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்சிறை நீக்கவரு கோவே பராக்கு
சிந்தையி னினைத்ததரு தேவே பராக்கு
பாவலர்து திக்கரிய காவே பராக்கு
பன்னருமணற் குவையி லாவே பராக்கு. (4)

பராக்கு.முற்றிற்று.

## லாலி

விக்னவி நாயகர்க்கும் லாலி லாலி
வேதமுத லானவர்க்கும் லாலி லாலி
நக்கனரும் நாதருக்கும் லாலி லாலி
நங்கையுமை பாலருக்கும் லாலி லாலி
தக்ககண நாதருக்கும் லாலி லாலி
தந்தமொர்கை வந்தவர்க்கும் லாலி லாலி
மிக்கமண்கும் பானி னர்க்கும் லாலி லாலி
மேவுவிக்ன ராசருக்கும் லாலி லாலி

லாலி .முற்றிற்று.

## மங்களம்

செயமங்களம் - நித்திய - சுபமங்களம்

வேதமுத லானவர்க்கும் வேலவர்முன் னானவர்க்கும்
போதகநல் லானனற்கும் புத்திமுத்தி யானவர்க்கும். (செய)

கங்கைமுடி யையருக்குங் கைகளைந்தார் மெய்யருக்கும்
அங்குசபா சக்கரற்கும் ஆகுவிலி வர்ந்தவர்க்கும். (செய)

வேலவர்பின் னானவற்கும் வேதமுடி யானவர்க்குஞ்
சீலமள்ள கோலருக்குஞ் செய்யகஞ்சக் காலருக்கும். (செய)

புங்கவக ணேசருக்கும் போற்றுமன்பர் நேசருக்குந்
துங்கமண் கும்பானினர்க்குஞ் சொல்லு விக்கினராசருக்கும் (செய)

தக்கசிவ பாலவிக் சூரற்கு மங்களம்.
தந்திமுக மற்றமுத லீசுரற்கு மங்களம். (செய)

மிக்கசுரர் தங்களனு கூலனுக்கு மங்களம்.
வேளுடனு தித்தமுதற் சீலனுக்கு மங்களம்.

செய மங்களம் - நித்திய - சுபமங்களம்.

மங்களம் .முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மண்கும்பான்
# அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி
# திருவூஞ்சல்

## காப்பு

பார்பூத்த ஈழவள நாட்டின் முத்தாய்
    பழந்தமிழர் வாழும்யாழ் நகரின் தென்பால்
ஏர்பூத்த மண்கும்பான் எழிலுற் றோங்க
    எழுந்தருளிக் கருணைபுரி இறைவ னான
சீர்பூத்த வள்ளிகுஞ் சரியர் சூழ
    ஸ்ரீசுப்ர மண்யரவர் ஏறி யாட
பேர்பூத்த ஊஞ்சலிசை பெருகி ஓட
    பிரணவனின் கழலிணைகள் காப்ப தாமே.

## நூல்

வேதமறை நான்கும்நற் கால்க ளாக
    விளங்குசிவா கமம்வயிர விட்ட மாக
ஓதுகலை ஞானமதே வட்டங்க ளாக
    ஒண்மறையி னோங்காரம் பீட மாக
நாதமய ஊஞ்சலிலே நன்க மர்ந்தே
    நல்லமுத அருளள்ளி நல்குமு ருகா
சீதவள மண்கும்பான் செழிக்க மேவும்
    ஸ்ரீசுப்ர மண்யாரே யாடீர் ஊஞ்சல்.

பூவுலகிற் பக்திநாற் கால்நி றுத்திப்
    புன்மைதவிர் புலனைந்தாம் விட்டம் பூட்டி
தாவுமெழில் நாற்கரண நாண்கள் மாட்டி
    தண்ணளிசேர் திருவருளாம் பலகை ஏற்றி
பாவமறு சீவாத்ம பாசம் நீங்கிப்
    பரமசிவன் தாள்சேர அருளும் வேலா
கூவுகுயில் மண்கும்பான் கொழிக்க மேவும்
    குகசுப்ர மண்யாரே யாடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரவனும் ஒளிர்மதியும் கவிகை தாங்க
கலைமகளும் அலைமகளும் கவரி வீச
மதியமரர் நின்றால் வட்டந் தாங்க
மங்கையர்கள் வந்தாசி மலர்கள் தூவ
துதிபுரியும் அடியருளம் சிலிர்த்தே யாட
துலங்குவடி வேலினொடு மயிலும் ஆட
அதிபுகழுள் மண்கும்பான் பதியில் மேவும்
அருட்கந்த சுவாமியரே யாடீர் ஊஞ்சல்.

வீடாறு குடிகொண்ட வேலா உந்தன்
விரைகழலின் திருவருளை யிரங்கி வேண்டி
நாடோறும் மலர்கொய்து நன்னீ ராடி
நறுநாமம் பலசொல்லி நம்பி ஏத்த
ஈடாடு மனத்துயரம் என்றும் நீக்கி
ஏற்றமிகு பெருவாழ்வை இகத்தில் ஈவாய்
நாடான மண்கும்பான் நகரைக் காக்க
நண்ணுசுப்ர மண்யாரே ஆடீர் ஊஞ்சல்.

ஆயிரத்தோ டெண்ணூற்றிப் பதினே ழாண்டில்
அன்புருவாய் வாழ்கணபதிப் பிள்ளை வேண்டி
பாயுமன்பால் சமைத்தமடா லயத்தில் வந்தே
பரிவுடனே குடிகொண்டு அருளை ஈந்தாய்
தோயுமன்பால் பால்தயிரும் தெங்கின் நீரும்
தேனொடுபஞ் சாமிருதத் தூநீ ராட்ட
ஆயுமன்பால் மண்கும்பான் பதியைக் காக்கும்
அருட்சுப்ர மண்யாரே யாடீர் ஊஞ்சல்.

அண்ணனவன் வடக்கிருந்து அரசு புரிய
அழகுசிவ காமியொடு முத்து மாரி
மண்ணதனில் கிழக்காக மகிழ்ந்தே சூழ
மனதிலுறு துயரமெலாம் மறைந்தே ஓட
கண்ணெனுநல் நெல்லிமர நிழலின் கீழே
கருணைமழை பொழியவரு கந்த சாமி
பண்ணிசையும் மண்கும்பான் பதியில் மேவும்
பாலசுப்ர மண்யாரே யாடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசூரன் கொடுமைமிக அதிக மாக
அமருலகில் அவதிபடு அமரர் சென்றே
கதிவேறு இன்றிமனம் கலங்கி நின்றே
கண்ணுதலான் கழல்பணிந்து காக்க வேண்ட
விதிமாற இறைவருமை தன்னை நோக்க
வியன்கருணை முகமாறும் கரம்பன் னிரண்டும்
அதிவீர வேலுங்கொண் டவத ரித்த
அருட்சுப்ர மண்யாரே ஆடீர் ஊஞ்சல்.

பழகருளின் ஞாயிறுகண் ணொளியில் வீச
படர்திங்கள் முகச்செவ்வாய் நகையும் பெச
அழகெறியும் வள்ளிதெய்வ யானை பாதம்
அணியுமெழிற் சிலம்புதன் னிசையும் பாய
எழுகலையுக் கிறைவியாழன் போடிசைக்க
எழில்வெள்ளி யரிசான மதற்ச னித்தே
தொழஅமரர் மண்கும்பான் துலங்க மேவும்
ஸ்ரீசுப்ர மண்யாரே ஆடீர் ஊஞ்சல்.

வெற்றிதரு வேலினொடு மயிலி லேறி
வியனுலகை நொடியதனில் விரைந்து மீள
பெற்றவரைப் பணிந்தண்ணன் கனியை வாங்க
பேதலித்து உறவுகளைப் பிரிந்து ஓடி
உற்றதொரு கோவணமும் தண்டி னோடும்
உயர்பழநி சென்றாண்டி யாகி நின்றாய்
அற்புதஇம் மண்கும்பான் நகரில் மேவும்
அருட்சுப்ர மண்யாரே ஆடீர் ஊஞ்சல்.

காராரும் கணபதியும் கணங்கள் யாவும்
கவின்சிவனும் உமையுமுளம் களித்தே யாட்ட
பேராரும் திருமாலும் பிரமன் முதலாம்
பிரியமுடைத் தேவர்களும் படர்ந்தே நிற்க
வாராரும் குழலிசிவ காமி யோடு
வளர்முத்து மாரியளும் வந்தே வாழ்த்த
சீராரும் மண்கும்பான் செழிக்க அருளும்
ஸ்ரீசுப்ர மண்யாரே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறுபல அருள்பவரே ஆடீர் ஊஞ்சல்
　　பேசுசிவ குருவாரே ஆடீர் ஊஞ்சல்
கூறுதுயர் தீர்ப்பவரே ஆடீர் ஊஞ்சல்
　　கும்பிட்டார் குறைதீர்ப்பீர் ஆடீர் ஊஞ்சல்
ஏறுமயில் வாகனரே யாடீர் ஊஞ்சல்
　　எழிற்கந்த சுவாமியரே யாடீர் ஊஞ்சல்
சீறிவரு வேலுடையீர் ஆடீர் ஊஞ்சல்
　　ஸ்ரீசுப்ர மண்யாரே யாடீர் ஊஞ்சல்.

## வாழி

நந்தமிழர் மொழவாழி நாடும் வாழி
　　நவிலுதிரு முறைவாழி மறையும் வாழி
முந்துசைவம் வாழியா னினமும் வாழி
　　முழுஉலகும் புகழ்சைவக் குருமார் வாழி
கந்தகுரு வேல்வாழி சேவல் வாழி
　　கருதுபரி பாலரொடு தொண்டர் வாழி
சிந்தழகு மண்கும்பான் செழித்தே வாழி
　　ஸ்ரீசுப்ர மண்யசுவா மியரும் வாழி.

## எச்சரீக்கை

தமிழன்வடி வுடனேயமர் தலைவா எச்ச ரீக்கை
தண்ணார்பழ முதிர்சோலையுள் தவமே எச்ச ரீக்கை
குமிழென்றுரை உயிர்கட்கருள் குமரா எச்ச ரீக்கை
குறவள்ளியிற் படரும்திரு முருகா எச்ச ரீக்கை
அமிழும்வினைத் துயர்தீர்த்திடு அமிர்தே எச்ச ரீக்கை
அருளும்மண் கும்பானுறை அழகா எச்ச ரீக்கை
உமிழும்அனல் வடிவாயுளம் உறைவோ யெச்சரீக்கை
ஒளிரும்ஸ்ரீ சுப்ரம்மண்ய சுவாமி எச்ச ரீக்கை.

## பராக்கு

விதியழிய மதியருளும் வேலா　　பராக்கு
வெய்யவினை வேரறுக்கும் வேந்தே　　பராக்கு
நதியதென அருள்வாரும் நாதா　　பராக்கு
நான்முகனைச் சிறையிலிடு நலமே　　பராக்கு
கதியருள் விழிமலரும் கந்தா　　பராக்கு
கதியிவர்க்குக் கருணைபுரி கடம்பா　　பராக்கு
பதியெனநம் மண்கும்பான் உறைவோய் பராக்கு
பரமன் ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி　　பராக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாலி

| | | |
|---|---|---|
| பன்னிருகை | வேலவர்க்கு | லாலி சுப லாலி |
| பழநிமலை | யாண்டவர்க்கு | லாலி சுப லாலி |
| இன்பமளி | முருகருக்கு | லாலி சுப லாலி |
| ஈசனுமை | பாலகர்க்கு | லாலி சுப லாலி |
| மன்னுகுற | வள்ளிக்கு | லாலி சுப லாலி |
| மகிழ் தெய்வ | குஞ்சரிக்கு | லாலி சுப லாலி |
| தன்னிணை | யிலாதவர்க்கு | லாலி சுப லாலி |
| ஸ்ரீசுப்ர | மண்யருக்கு | லாலி சுப லாலி |

# மங்களம்

மருவுநட ராஜனுக்கும் மாதுமைக்கும் மங்களம்
மண்கும்பான் பிள்ளையார்க்கும் மயிலினுக்கும் மங்களம்
பெருகுகொடிச் சேவலுக்கும் வேலினிற்கும் மங்களம்
பிரியமுத்து மாரிசிவ காமியிற்கும் மங்களம்
உருகியழு மடியருக்கும் வைரவர்க்கும் மங்களம்
உலகிற்சைவ நீதிஓங்க உழைப்பவர்க்கும் மங்களம்
அருளொழுகு வள்ளிதெய்வ யானையர்க்கும் மங்களம்
அருள்மிகு சுப்ரமண்ய சுவாமியிற்கும் மங்களம்

மங்களம் ஜெய மங்களம் ஜெய மங்களம் ஜெய மங்களம்
மங்களம் சுப மங்களம் சுப மங்களம் சுப மங்களம்

சுபம்.

ஆக்கம்
இராசையா குகதாசன்
நாயன்மார்கட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்கும்பான்- பெரியபுலம் ஸ்ரீ முத்துமாரி (கறுப்பாச்சி) அம்மன் மேல் திருவூஞ்சல்

அருந்தவமும் அறநெறியும் ஊன்றி வாழும்
    அகம்முழுதும் அன்பின்ஒளி நின்று ஆளும்
விருந்தோம்பும் அரும்பண்பும் குல மாண்பும்
    விட்டகலா இசையாழ் மீட்கும் மண்ணின்
தருமருவும் சப்ததீவின் திலக மென்றே
    திறம்புவர்தம் மண்கும்பான் கிழக் கூரில்
இருந்தருளும் நின்தாய்கே ஊஞ்சல் பாட
    வெள்ளைப்புற்று நாயகா நீயே காப்பு

நால்வேதம் நாற்புறமும் தூண்க ளாக
    நவிலும்சிவ ஆகமங்கள் விட்ட மாக
மேல்மருவும் ஞானகலை வடங்க ளாக
    மேவுமருள் நாதவிந்து பலகை யாக
தாளூன்றும் பிரணவமென் பீட மாக
    தாளம்பூ மெத்தைதலை யணையு மாக
வாழ்வியம்பும் கறுப்பாச்சி வடந்தொட் டாட்ட
    வளர்கண்ணே முத்துமாரி ஆடீ ரூஞ்சல்

பண்ணினிய பாவலர்சங் கீதம் பாட
    பாங்காகத் தேன்குரலோர் பக்கம் பாட
கண்ணசைவில் ஏந்திழையாள் நடனங் காட்ட
    காண்பரிய தீபவொளி இருளை யோட்ட
வண்ணமுதத் தேவாரம் பக்தர் பாட
    வருமடியார் கூட்டமெல்லாம் பணிகள் ஆற்ற
மண்ணழகுப் பெரியபுலம் பதி தன்னில்
    மகிழ்ந்துறைந்த மாரியம்மே ஆடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரனார் இறங்கிவந்து கவிகை தாங்க
இறைமகிழ வாயுதேவ வட்ட மோங்க
அந்தணர்கள் தூவும்மலர் எங்கும் தேங்க
அம்பளவு விழியாருளம் கவி நீங்க
விந்தைமிகு அற்புதங்கள் பாரில் ஓங்க
விளங்குமணித் தீவின் வெள்ளைப் புற்றின்
தந்திமுகப் பிள்ளாய் எம்வீர கத்தி
தாயல்லோ மாரியம்மே ஆடீ ரூஞ்சல்

சிவமாந்தர் பதியாழில் யாழ் மீட்க
சிவசிந்தை யோடுபக்தர் அபயம் கேட்க
நவகோள்கள் ஆளும்அன்னை நெஞ்சம் பூக்க
நனிசிறந்த சப்ததீவின் அலைகள் ஆர்க்க
சிவசக்தி தாய்சக்தி நோக்க நோக்க
சித்திரமே எம்வாழ்வை ஆக்க ஆக்க
அவளன்றி சக்தியில்லை பெரியபுலம் வாழ்
ஆரணங்கே மாரியம்மே ஆடீ ரூஞ்சல்

திருநீறும் சந்தனமும் திசைமணம் கமழ
திருவாசக புராணங்கள் திருவாய் மலர
அருளூறும் ஐந்தெழுத்தை முறையாய் ஓத
அடிபரவும் சிவதொண்டர் நாமம் போற்ற
மெருகேறி வாழ்வெலாம் இன்பம் தேங்க
மேலோங்கிக் கமபுலங்கள் நிலை நிற்க
ஒருஊறும் எமக்கில்லை சரண் நாங்கள்
ஓம்முத்து மாரியம்மே ஆடீ ரூஞ்சல்

சங்குபறை உடுக்கோடு முர சதிர
தங்கும்கொடி யாலவட்டம் சேர்ந் தசைய
எங்குமடி யார்கூட்டம் இருகை கூப்ப
ஏகாந்த முனிவர்தாம் வணங்கிப் போற்ற
தங்குமிருள் போக்கிடவே மண்கும் பானில்
தலங்கொண்ட குலத்தாயே கறுப் பாச்சி
இங்குபொழி அருளுக்கும் ஈடுண்டோ சொல்
இறையவளே மாரியம்மே ஆடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்புநிற ஆச்சியுன்னைக் கொண்டு வந்து
கரும்பனை ஓலைகளால் குழல் அமைத்து
விருப்பமுடன் துதிசெய்து வழிபா டாற்றி
வேண்டிஇறை நலங்கள் பெற்றே உய்ய
திறம்புகழ் மண்கும்பான் கிழக் குதித்த
திரவியமே மாரியுன்றன் திருத்தாள் போற்றி
கறுப்புநிற ஆச்சியுன்னை வழிபட்ட ஆதலால்
கறுப்பாச்சி அம்மாநீ ஆடீ ரூஞ்சல்

ஆண்டுபல நூறின்முன் வந்தே இந்த
அருகர்வாழ் திருவூரில் காட்சி தந்து
வேண்டுமருட் கடாட்சமும் நல்கு கின்ற
வேம்புலியே மாமாரி சேபித் தருள்
நீண்டதெருக் கடந்தேகும் பக்தர் தமக்கு
நீயின்றிக் கதியாரு நீர்சூழ்ந்த தீவை
ஆண்டருளும் அங்கயற் கண்ணித் தாயே
அடிமலர்கள் தாருமம்மா ஆடீ ரூஞ்சல்

தங்கநிறச் சௌந்தரியே ஆடீ ரூஞ்சல்
தத்திமுகம் தந்தவளே ஆடீ ரூஞ்சல்
திங்களொளி கொண்டவளே ஆடீ ரூஞ்சல்
தித்திக்கும் தேன்கரும்பே ஆடீ ரூஞ்சல்
பொங்குதமிழ் பொற்புறவே ஆடீ ரூஞ்சல்
பொன்விளைய மண்நிறைய ஆடீ ரூஞ்சல்
மன்னுபெரும் புலத்தாயே ஆடீ ரூஞ்சல்
மண்கும்பாண் மணிமுத்தே ஆடீ ரூஞ்சல்

வாழி

கண்ணருங்கில் கவிதீர்க்கும் கற்பகமே வாழி
கருவிருந்து கடைசிவரை காப்பவளே வாழி
மண்குளிர மாமாரி மழைதந்து வாழி
மனம்போல நிலபுலங்கள் செழிக்கநீ வாழி
தண்ணொளியாய் அறப்பணிகள் செய்திடுவோர் வாழி
தாமாகப் பூசைவிழா புரிந்திடுவோர் வாழி
இன்னமுதத் தமிழ்பேசும் இறையன்பர் வாழி
இனியெல்லாம் எமக்கவளே முத்துமாரி வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கை

வளர்சப்த தீவனங்கே மாரீ எச்சரிக்கை
வழிப்பிள்ளை வீரகத்தி தாயீ எச்சரிக்கை
மலர்ஒப்ப மண்புக்காள் ஆயீ எச்சரிக்கை
மண்கும்பாண் பதிநாரி சூலீ எச்சரிக்கை
தளர்வின்றி இடர்போக்கும் வில்லீ எச்சரிக்கை
தனம்பொருள் தருவிக்கும் லக்சுமீ எச்சரிக்கை
பலர்நெஞ்சின் பராபரையே பார்வதீ எச்சரிக்கை
பதிநோன்பு நோக்கஅருள் அம்மா எச்சரிக்கை

பராக்கு

நீறணி ஏறுடையான் தேவி பராக்கு
நிறைசடையில் பிறையுடையான்மாரி பராக்கு
ஆரமணி ராகினியே அம்பிகையே பராக்கு
அரைதுயில் மாலுடைய சோதரியே பராக்கு
வீரஅரி ஏறிவரும் சிம்மவாகினியே பராக்கு
வீழஇடர் மாயவரம் செய்திடுவாய் பராக்கு
ஈரஅவை கெஞ்சிவரும் ஊருடையார் பராக்கு
ஈய்ந்துசர்வ சுபமருளும் மாரியம்மா பராக்கு

மங்களம்

முத்துமாரி அம்பிகைக்கு மங்களம் - தூய
முத்திதரும் தாயவளின் சேவடிக்கு மங்களம்
அத்தனுறை ஈஸ்வரிக்கு மங்களம் - ஆய
அண்டமெல்லாம் காத்தருளும் ஆரணிக்கு மங்களம்
வித்தகி சுபமங்கலிக்கு மங்களம் - மேவு
வேகஅலைத் தீவாளும் நாரணிக்கு மங்களம்
சக்திமகா தேவிக்கு மங்களம் - நிறை
சங்கடங்கள் போக்கியருள் நிர்மலிக்கு மங்களம்

ஆக்கம்
கவிக் கதிரோன்
வேலணையூர் சுரேஷ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# நக்கீரதேவ நாயனார்

திருமுருகாற்றுப்படை நேரிசை வெண்பா

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு
மன்றங் கமரரிடர் தீர்த்ததுவு - மின்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல்.

உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

அஞ்சுமுகந் தோன்றி லாறுமுகந் தோன்றும்
*வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சி
லொருகா னினைக்கி னிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னான்

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பட்டணத்தார் பாடல்

# திருமுறை 11

## திருத்தில்லை

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதால் லாற்பொன்னி னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே.

காலை யுபாதி மலஞ்சல மாமன்றிக் கட்டுச்சியிற்
சால வுபாதி பசிதாக மாகுமுன் சஞ்சிதமாம்
மாலை யுபாதி துயில்காம மாமிவை மாற்றிவிட்டே
ஆலமு கந்தரு ளம்பல வாவென்னை யாண்டருளே

## திருவொற்றியூர்

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து,
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்!திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

## திருக்கழுக்குன்றம்

காடோ செடியோ கடல்புற மோகன மேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடு வோநல மேமிகுந்த
வீடோ புறந்திண்ணை யோதமி யேனுடல் வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றி லீசா யுயிர்த்துணை நின்பதமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது

கையொன்று செய்ய விழியொன்று நாடக்
கருத்தொன் றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று
பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று
கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள்
வாய்வினை தீர்த்தவனே

சீயுங் குருதிச் செழுநீர் வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும் புடைவையொன் றில்லாத போது பகலிரவாய்
ஈயு மெறும்பும் புகுகின்ற யோனிக் கிரவுபகல்
மாயு மனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே

என்பெற்ற தாயரு மென்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்
உன்பற் றொழிய வொருபற்று மில்லை உடையவனே!

## உடற் கூற்று வண்ணம்

ஒருமடமாதுமொருவனுமாகி யின்பகம்தரு
மன்புபொருந்தி யுணர்வுகலங்கி வொழுகியவிந்து
வூறுசுரோணித மீதுகலந்து-
பனியிலோர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்துபு
குந்துதிரண்டு பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைகளென்ற-
உருவமுமாகி யுயிர்வளர்மாத மொன்பதுமொன்றுநி
றைந்துமடந்தை யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும் வாரமு நாளுமறிந்து-
மகளிர்கள்சேனை தரவணையாடை மண்படவுந்தியு
தைந்துகவிழ்ந்து மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிநகையூற லிதழ்மடவாரு வந்துமுகந்திட
வந்துதவழ்ந்து மடியிலிருந்து மழலைபொழிந்து
வாவிரு போவென நாமம்விளம்ப-
உடைமணியாடை யரைவடமாட வுண்பவர்தின்பவர்
தங்களோடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரோ டோடிநடந்து-
அஞ்சுவய தாகி விளையாடியே
உயர்தருஞான குருவுபதேச முந்தமிழின்கலை
யுங்கரைகண்டு வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும்வந்து -
மயிர்முடிகோதி யறுபதநீல வண்டிமிர் தண்டொடை
கொண்டைபுனைந்து மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க -
மதனசொரூப னிவனெனமோக மங்கையர்கண்டும
ருண்டுதிரண்டு வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில் போலவர் போவதுகண்டு-
மனதுபொறாம லவர்பிறகோடி மங்கலசெங்கல
சந்திகள்கொங்கை மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி-
ஒரு முதலாகிய முதுபொருளாயி ருந்ததனங்களும்
வம்பிலிழந்து மதனசுகந்த விதனமிதென்று
வாலிப கோலமும் வேறுபிரிந்து-
வளமையுமாறி யிளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து
செங்கையினி லோர் தடியுமாகியே-
வருவதுபோவ தொருமுதுகூனு மந்தியெனும்படி
குந்திநடந்து மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமல் மொழிந்து-
துயில்வருநேர மிருமல்பொறாது தொண்டையுநெஞ்சமு
லர்ந்துவறண்டு துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர் பாலர்கள் கோரணிகொண்டு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுகமீதி லிவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்ச கலகலவென்று மலசலம்வந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து -
தெளிவுமிராம லுரைதடுமாறி சிந்தையுநெஞ்சமு
லைந்துமருண்டு திடமுமுலைந்து மிகவுமலைந்து
தேறிந லாதர வேதெனநொந்து -
மறையவன்வேத னெழுதியவாறு வந்ததுகண்டமு
மென்றுதெளிந்து இனியெனகண்ட மினியெனநொந்த
மேதினி வாழ்வுநி லாதினிநின்று -
கடன்முறைபேசு மெனவுரைநாவு றங்கிவிழுந்துகை
கொண்டுமொழிந்து கடைவழிகஞ்சி யொழுகிட வந்து
பூதமு நாலுசு வாசமுநின்று -
வளர்பிறைபோல வெயுறுமுரோம முஞ்சடையுஞ்சிறு
குஞ்சியும்விஞ்ச மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள் வந்து -
வலைகொடுவீசி யுயிர்கொடுபோக மைந்தரும்வந்துகு
னிந்தழநொந்து மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கின ரேயிலர் காலமறிந்து -
பழையவர்காணு மெனுமயலார்கள் பஞ்சுபறந்திட
நின்றவர்பந்த ரிடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம் வேக விசாரியுமென்று
பலரையுமேவி முதியவர்தாமி ருந்தசவங்கழு
வுஞ்சிலரென்று பணிதுகில்தொங்கல் களபமணிந்து
பாவக மேசெய்து நாறுமுடம்பை -
வரிசைகெடாம லெடுமெனவோடி வந்திளமைந்தர்கு
னிந்துசுமந்து கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வென நொந்து
விறகிடைமூடி யழல்கொடுபோட வெந்துவிழுந்துமு
றிந்துநிணங்க ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடி நீறுமி லாதவுடம்பை -
நம்புமடியேனை யினியாளுமே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்கள்

ஊருஞ் சதமல்ல வுற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றால் கச்சியேகம்பனே.

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடியாடி முடித்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகேயினிச் சாகும் பிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண் கயிலாபுரிக் காளத்தியே.

இருப்பது பொய் போவது மெய் யென்றெண்ணி நெஞ்சே
யொருத்தருக்குந் தீங்கினை யுன்னாதே புகுந்ததொழி
நம்மரென்று நாமிருக்க நாய் நரிகள் பேய்க்கழுகு
தம்மரென்று தாமிருக்குந் தான்.

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வருவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை ஒருவர் கடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையும் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப் படிவருமோ சலியாதி ரென்னேழை நெஞ்சே.

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசித்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையுந் தொழாப் பிழையும்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்துருள்வாய் கச்சியேகம்பனே.

### தேற்றம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கு மதுவழியே நாம் போமளவும்
எமக்கென் னென் றிட்டுண்டிரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபூஷணம்
## சிவஸ்ரீ சதாசிவ ஐயர் தில்லைநாதன் ஐயா அவர்களின்
## வாழ்க்கை வரலாறு.

இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ள சப்த தீவுகளில் பெரியதீவாகிய வேலணைத் தீவில் அமைந்து சைவ மக்களுக்கு அருளாட்சி செய்து வருகின்ற மண்கும்பாண் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பரம்பரை ஆதீனகர்த்தாவாக விளங்கி விநாயகப் பெருமானின் வழிபாடுகளை ஆற்றிவந்தவரும் மூத்த சைவக் குருவுமாகிய அமரர் சிவஸ்ரீ தில்லையம்பலம் ஐயா சதாசிவம் ஐயா அவர்கள். குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் கோவில் ஆதீன கர்த்தாவாகிய சின்னத்துரை ஐயா விசாலாட்சி அம்மா தம்பதிகளின் புத்திரி கண்ணம்மாவை திருமணம் செய்து செல்லம்மா இலட்சுமிதேவி ஆகிய இரு பிள்ளைகளை பெற்றெடுத்தார். கண்ணம்மா இறைவனடி சேர்ந்த பின் சதாசிவம் ஐயா சங்கரத்தை சாத்திரியார் மடத்தை சேர்ந்த அன்னலட்சுமி அம்மா அவர்களை திருமணம் புரிந்து இனிது வாழ்ந்து அவ்வாழ்வின் பயனாக அமரர் சண்முகநாதக்குருக்கள், தில்லைநாதன் ஐயா, கணநாதன் ஐயா, சற்குணதேவி ஆகியோரை பிள்ளைச் செல்வங்களாக பெற்றார்கள். சதாசிவம் ஐயா அன்னலட்சுமி அம்மாவின் இரண்டாவது மகனாகிய தில்லைநாதன் ஐயா **12.06.1945** இல் தமது பூவுலக வாழ்வை ஆரம்பித்தார்கள்.

தனது ஆரம்பக் கல்வியை மண்கும்பான் அ.த.க. பாடசாலையிலும் உயர்கல்வியை கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்கள். பாடசாலைக் கல்வி கற்கும்போதே தனது தந்தையாரின் வழிகாட்டலில் ஆலய பூஜை, சுவாமி அலங்காரம், மணவறை அமைத்தல், சப்பறம் அமைத்தல் போன்ற பணிகளையும் செய்துவந்தார். தனது சகோதரர்களுடன் இணைந்து மண்கும்பான் வெள்ளைப்புற்றடியானின் நித்திய நைமித்திய வழிபாடுகளை ஆற்றியுள்ளார்கள். தந்தையாருக்குப் பின்னர் ஆலய பூஜைப் பணியை மூத்த தமயனாராகிய சண்முகநாதக்குருக்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாரின் இதரபணிகளாக இருந்த சுவாமி அலங்காரம் (சாத்துப்படி), மணவறை, பூமணவறை, தண்டிகை, முத்துச்சப்பரம், பூச்சப்பரம் ஆகியன அமைக்கும் பணியை தனது பணியாக ஏற்றுக்கொண்டு அதில் சிறப்புத் தேர்ச்சியும் அடைந்தார்கள்.

உயர்கல்வியை பெற்றுக்கொள்வதற்காக தனது மூத்த சகோதரி செல்லம்மா பாலசுந்தரக்குருக்கள் அவர்களுடன் தங்கி நாயன்மார்கட்டில் வாழ்ந்து வந்த வேளை தனது மைத்துனரின் சகோதரிகளில் காதல் வயப்பட்டு **1967** ம் ஆண்டு சரஸ்வதி தேவியையும், **1970**ஆம் ஆண்டு இராசலட்சுமியையும் திருமணம் செய்து கொண்டார்கள். இதன் மூலம் நாயன்மார்கட்டு வெயிலுகந்த பிள்ளையார் கோவில் ஆதீனகர்த்தாக்களில் ஒருவராகிய சோதிலிங்கம் ஐயா சின்னம்மா தம்பதிகளின் மருமகனுமாயினார்.

சரஸ்வதி தேவியுடனான இனிய இல்லறத்தின் பயனாக இரஜீந்திரன், அமரர் விமலேந்திரன், சுரேந்திரன், அமரர் குலேந்திரன், இந்திரன் ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்றார்கள். இராசலட்சுமி அம்மாவுடன் மகிழ்வான இல்லறத்தை நடத்தி அழகேசக்குருக்கள், கேசவன் ஆகிய மழலைகளை பெற்றார்கள். இவரது வாழ்வில் **1984** ஆம் ஆண்டு நடந்த தனது மனைவி இராசலட்சுமியின் மறைவு ஈடுசெய்ய முடியாத துயரமாக அமைந்தது.

பிள்ளைகள் அனைவருக்கும் வேண்டிய கல்வியைப் போதிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததோடு, தமது குலப்பணிகளையும் அவர்களுக்கு போதிக்க தவறவில்லை. அந்தவகையில் இரஜீந்திரன் ஐயா நாயன்மார்கட்டிலும், அழகேசக்குருக்கள் கொழும்பிலும் பூர்வீக ஊரான மண்கும்பானிலும் சகல இடங்களிலும், மற்றும் ஜனாதிபதி மாளிகையிலும், பிரதமமந்திரி மாளிகையிலும், பாராளுமன்றத்திலும், பொலிஸ் பூங்காவிலும் இறைபணியையும், அலங்காரங்களையும் செய்து வருகின்றார். கேசவன் ஐயா கொழும்பிலும் அல்வாயிலும் ஆலய பூஜைப் பணியுடன் மூர்த்தி அலங்காரம், மணவறை அமைத்தல் போன்றவற்றையும் சிறப்பாக ஆற்றி வருகின்றார்கள். சுரேந்திரன் மாலை கட்டுதல் மணவறை அலங்காரங்களை கனடா நாட்டில் செய்து வருகின்றார். கடைசி மகனாகிய இந்திரன் (தில்லை திருமண சேவை) கொழும்பில் திருமண வைபவங்களுக்கான மணவறை அலங்காரங்களை சிறப்பாக ஆற்றிவருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் திருமணவயதை அடைந்ததும் இரஜீந்திரன் ஐயாவை வரணியைச் சேர்ந்த இராசையா-தங்கம்மா தம்பதிகளின் புதல்வி புவனேஸ்வரிக்கு மணம்முடித்து அதன் மூலம் சுதர்சன், வத்சலா, திலக்ஷனா ஆகிய பேரப்பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தார்.

அழகேசக்குருக்களை அச்சுவேலி தீர்த்தாங்குளப்பிள்ளையார் ஆலய அர்ச்சகரும் பிரபல சப்பற அமைப்பாளருமாகிய பாலசுப்பிரமணியம் ஐயா இராஜஇராஜேஸ்வரி தம்பதிகளின் புதல்வி அனுசா அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். இவர்களது இல்லறத்தால் சுகிர்தன், அமிர்தன், ஸூஹர்ணா ஆகிய பேரக்குழந்தைகளைப் பெற்று மகிழ்ந்தார்கள்.

தனது குலதெய்வமாகிய வீரகத்தி விநாயகரின் ஆலய சாத்துப்படி அலங்காரம் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் பிரபலமாகிய ஆலயங்கள் முதல் சிறிய ஆலயங்கள் வரை எல்லா ஆலயங்களிலும் சுவாமி அலங்காரங்களை மிகச்சிறந்த முறையில் ஆற்றி சுவாமி அலங்காரத்தில் தனக்கென்று ஒரு பாணியையும் உருவாக்கிக் கொண்டார்கள். இதுபோன்று முத்துமணவறையாக திருமண நிகழ்வுகள் நடைபெற்றுவந்த காலத்தில் அவற்றை பூமணவறைகளாக மாற்றி அமைத்துக் காட்டி இயற்கைப் பூக்களைக் கொண்டு மங்கள நிகழ்வுகளுக்கான மணவறைகளை அமைத்துக் கொடுத்தார்கள். அதுமட்டுமன்றி முதன்முதலாக மூன்று வாசல்களுடன் கூடிய மணவறையையும் வடிவமைத்து அவை மங்கள நிகழ்வுகளில் பயன்படுத்த காரணமாக இருந்தார்கள். தற்போது பெரும்பான்மையான கல்யாண மண்டபங்களின் காட்சி தரும் மூன்று வாசல் மணவறை அலங்காரத்திற்கான முன்னோடியாக இவர் விளங்குகின்றார். தில்லைநாதன் ஐயா அவர்கள் யாழ்ப்பாண மாவட்டமல்லாது இலங்கையின் அனைத்து பாகங்களில் தனது பணியை ஆற்றியுள்ளார்கள்.

தனது மூத்த இருமகன்களின் திருமணங்களை நிறைவேற்றிய பின்பு அவர்களை நாயன்மார்கட்டிலிருந்து தமது பணியை ஆற்றுமாறு பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டு தான் கொழும்பு மாநகருக்கு சென்று அங்கும் தமது பணியை சிறப்புற ஆற்றினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான மகிழ்வான இவரது வாழ்வில் **1994**ம் ஆண்டு மகன் குலேந்திரனின் இழப்பும் **1998**ஆம் ஆண்டு மகன் விமலேந்திரனின் இழப்பும் இவருக்கு மிகுந்த மனவேதனையைக் கொடுத்தது.

இருப்பினும் தனது மற்றைய பிள்ளைகளின் வாழ்வை வழிப்படுத்த வேண்டிய கடமையின் நிமித்தம் அல்வாய் புதுக்குளங்கரை விநாயகர் ஆலயத்தைச் சேர்ந்த விஜயரட்ணம் மங்கையற்கரசி தம்பதிகளின் புதல்வி வினோதினியை கேசவனுக்கு துணைவியாக்கி அவர்களின் பிள்ளைகளாகிய மதுசூதனன், சுபாங்கி ஆகிய மழலைகளின் அன்பையும் பெற்றுக் கொண்டார்கள்.

கனடாவில் வசித்துவரும் சுரேந்திரனுக்குதிரு. திருமதி. தைரியராசா தம்பதிகளின் புதல்வி லில்லியை திருமணம் செய்து வைத்து டனிஸ், ஹாசினி, குரு ஆகியோரையும் பேரக்குழந்தைகளாகப் பெற்றார்.

மலேசியாவில் வசித்துவரும் நடராஜா குருக்கள் தனபாக்கியலெட்சுமி தம்பதிகளின் புதல்வி கயல்விழியை இந்திரனுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். இவ்வாறு மனைவி பிள்ளைகளுடனும் மருமக்களுடனும் பேரப்பிள்ளைகளுடனும் தனது வாழ்வை மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார்கள்.

இவரது பணியைப் பாராட்டி இலங்கை அரசாங்கத்தின் கலாச்சாரத் திணைக்களம் கலைஞர்களுக்கு வழங்கும் கலாபூஷணம் விருதை சுவாமி அலங்காரத்திற்கான சிறப்பு விருதாக வழங்கி கௌரவித்தது.

சைவக்குருமார்களில் முதன்முதலாக இக்கலாபூஷண விருதைப் பெற்று சைவக்குருமார்கள் அனைவருக்கும் பெருமைதேடித்தந்த எங்கள் தில்லைநாதன் ஐயா அவர்கள் **24.10.2017**ம் திகதி கந்தஷஷ்டி விரத காலத்தில் ஸ்கந்த பஞ்சமி அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலாபூஷணம்" சிவஸ்ரீ சதாசிவ ஐயர் தில்லைநாதன் ஐயா அவர்கள் கலாபூஷண விருது பெற்றமையைப் பாராட்டி நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலயம் நடத்திய பாராட்டுவிழாவின் போது வெளியிடப்பட்ட நூலிலிருந்து ஐயா பற்றிய பார்வை.

கலாச்சாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 15.12.2015 அன்று கொழும்பில் நடைபெற்ற கௌரவிப்பு விழாவில் கலாபூஷணம் விருதைப் (சுவாமி அலங்காரம்) பெற்றுக்கொண்ட மூத்த சைவக்குருமணி சிவஸ்ரீ சதாசிவ ஐயர் தில்லைநாதன் ஐயா அவர்களை வாழ்த்துவதோடு, அவர் பற்றிய விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

அறிமுகம்:

தனது தந்தையான மண்கும்பான் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான ஆதீனகர்த்தா அமரர் சதாசிவ ஐயர் அவர்களிடமிருந்து பரம்பரையாக பெற்றுக்கொண்ட கலைப்பாரம்பரியத்தினூடாக ஆலய உற்சவங்களில் சுவாமி அலங்காரங்களை (சாத்துப்படி) செய்தல், முத்துச்சப்பரம், பூச்சப்பரம், முத்து மணவறை, பூமணவறை, தண்டிகை, மேடையலங்காரம், சிகரம் அமைத்தல், பூமாலை கட்டுதல் போன்ற பாரம்பரிய கலையம்சங்களை இன்றுவரை செய்து வருகின்றார்.

பிறந்த ஊரான மண்கும்பானில் தொடங்கிய தனது கலைச் சேவையை திருமண பந்தத்தின் மூலம் நாயன்மார்கட்டிலிருந்து தொடர்ந்து தற்போது கொழும்பு மாநகரில் தனது சேவையை தொடர்வதோடு மட்டுமல்லாமல் தனது பிள்ளைகளையும் இக்கலைத்துறையில் ஈடுபடுத்தி இப் பாரம்பரியக்கலை வளர்ச்சிக்கு பணியாற்றி வருகிறார்.

படைப்புக்கள் தொடர்பான சுருக்கமான விபரம்:

- இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள ஆலயங்களில் சுவாமி அலங்காரங்களை நிறைவேற்றியது.
- மணவறை, பூமணவறை, முத்துச் சப்பரம், பூச்சப்பரம், தண்டிகை என்பவற்றை ஆலய உற்சவகாலங்களில் அமைத்துக்கொடுத்தல்.
- மணவறை, சப்பரம் போன்றவற்றை உருவாக்கி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள ஆலயங்கள், திருமண மண்டபங்களுக்கு வழங்கியது.
- முதன் முதலாக திருமண நிகழ்வுக்குரிய மூன்று வாசல்களுடன் கூடிய மணவறையை வடிவமைத்து வழங்கியது.
- தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் Fibre மணவறைகளில் பல வடிவங்களை அமைத்து திருமண நிகழ்வுகளுக்கு வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையாற்றிய ஆலயங்கள் - யாழ்ப்பாணம்

- மண்கும்பான் பிள்ளையார் கோவில்.
- மண்கும்பான் சிவகாமி அம்மன் கோவில்.
- மண்கும்பான் கந்தசாமி கோவில்.
- மண்கும்பான் கருப்பாத்தி அம்மன் கோவில்.
- வேலணை முடிப்பிள்ளையார் ஆலயம்.
- வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலயம்.
- புளியங்கூடல் நிந்தன் பிள்ளையார் ஆலயம்.
- நாரந்தனை வைரவர் கோவில்.
- சரவணை முருகமூர்த்தி கோவில்.
- நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலயம்.
- நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் ஆலயம்.
- நாயன்மார்கட்டு பேய்ச்சியம்மன் கோவில்.
- நல்லூர் பாணங்குளம் நாச்சியம்மன் ஆலயம்.
- வண்ணை வீரமாகாளி அம்மன் கோவில்.
- பாண்டியன்தாழ்வு ஈச்சமட்டை ஞானவைரவர் ஆலயம்.
- கொய்யாத்தோட்டம் விநாயகர் ஆலயம்.
- கல்வியங்காடு இலங்கைநாயகி அம்மன் கோவில்.
- திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில்.
- திருநெல்வேலி பழங்கிணற்று பிள்ளையார் கோவில்.
- திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் கோவில்.
- திருநெல்வேலி முத்துமாரியம்மன் கோவில்.
- திருநெல்வேலி சாயிதுர்க்கை அம்மன் கோவில்.
- திருநெல்வேலி கொண்டலடி வைரவர் கோவில்.
- திருநெல்வேலி யாழ் பல்கலைக்கழக பரமேஸ்வரன் கோவில்
- தட்டதெரு மில்குவைற் பிள்ளையார் கோவில்.
- அராலி அம்மன் கோவில்.
- அராலி கரப்பிட்டிக் கந்தசாமி கோவில்.
- அராலி மாதாங்கோவில்.
- சங்கரத்தை பத்திரகாளி கோவில்.
- சங்கரத்தை முருகமூர்த்தி கோவில்.
- மூளாய்ப் பிள்ளையார் கோவில்.
- காரைநகர் கிழவன்காடு கந்தசாமி கோவில்.
- கட்டப்பிராய் முத்துமாரியம்மன் கோவில்.
- இருபாலை கற்பகப்பிள்ளையார் கோவில்.
- நீர்வேலி பத்திரகாளியம்மன் கோவில்.
- இடைக்காடு புவனேஸ்வரியம்பாள் ஆலயம்.
- கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நெல்லியடி முருகன் கோவில்.
- வதிரி உள்ளியநெல்லை கண்ணகாம்பிகை ஆலயம்.
- உடுப்பிட்டி வல்லைவாழிப் பிள்ளையார் ஆலயம்.
- உடுப்பிட்டி பத்திரகாளி அம்மன் ஆலயம்.
- வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்.
- நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் கோவில்.
- வறணி சுட்டிபுரம் அம்மன் கோவில்.
- கப்பூது கந்தசாமி கோவில்.
- மீசாலை மாவடிப்பிள்ளையார் ஆலயம்.
- மீசாலை கரும்புமாவடி முருகன் கோவில்.
- சாவகச்சேரி சோலையம்மன் கோவில்.

சேவையாற்றிய ஆலயங்கள் – கொழும்பு

- ஜிந்துப்பிட்டி முருகன் கோவில்.
- கொம்பனித் தெரு முருகன் கோவில்.
- செக்கட்டித்தெரு முருகன் கோவில்.
- பெகலியகொட சித்திவிநாயகர் கோவில்.
- வெள்ளவத்தை நாகபூசணி அம்மன் கோவில்.
- இரத்மலானை திருநந்தீஸ்வரம் தேவஸ்தானம்.
- பாணந்துறை முருகன் கோவில்.
- புதுச்செட்டித்தெரு மாரியம்மன் கோவில்.

சேவையாற்றிய ஆலயங்கள் – ஏனைய பிரதேசங்கள்

- கெக்கிராவைப் பிள்ளையார் ஆலயம்.
- மதவாச்சிப் பிள்ளையார் ஆலயம்.
- புத்தளம் மதுரங்குளி முருகன் ஆலயம்.
- திருகோணமலை ஆலடிப்பிள்ளையார் ஆலயம்.
- திருகோணமலை சாம்பல்தீவு மகாமாரியம்மன் கோவில்.
- திருகோணமலை துர்க்கை அம்மன் கோவில்.
- மன்னம்பிட்டி முருகன் கோவில்.
- சந்திவெளிப் புதுப்பிள்ளையார் ஆலயம்.
- சித்தாண்டி முருகன் கோவில்.
- ஏறாவூர் வீரபத்திரர் கோவில்.
- போரதீவு பத்திரகாளியம்மன் கோவில்.
- திருக்கோவில் சித்திரவேலாயுதர் தேவஸ்தானம்.
- இறக்குவானை அம்மன், பிள்ளையார் ஆலயம்.
- இரத்தினபுரி மகாவலதோட்டம் முத்துமாரி அம்மன் கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவறை, சப்பரங்கள் வடிவமைத்து வழங்கியது.

- நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் (மூன்று வாசல் முத்துச் சப்பரம்), திருகோணமலை துர்க்கை அம்மன், மட்டக்களப்பு சந்திவெளிப் பிள்ளையார் கோவில், கனடா கந்தசாமி கோவில் என்பனவற்றுக்கு முத்துச் சப்பரங்களை வடிவமைத்து வழங்கியது.

- ஆவரங்கால் சிவசக்தி மண்டபம், நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபம், நீர்வேலி செல்வ மகால், நெல்லியடி முருகேசன் மண்டபம், ASR திருமண மண்டபம், ஹற்றன் நோவோட்ஸ் கந்தசாமி கோவில் ஆகிய மண்டபங்களுக்கு மணவறை அமைத்து வழங்கியது.

- கனடா, ஜேர்மனி, இங்கிலாந்து, நோர்வே, சுவிஸ், பிரான்ஸ், சிங்கப்பூர், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு திருமண மண்டபங்களுக்கான மணவறைகளை செய்து வழங்கியது.

- கொழும்பு செக்கட்டித்தெரு கதிரேசன் மண்டபம், நீர்கொழும்பு திருமண மண்டபம் உட்பட இலங்கையின் பல திருமண மண்டபங்களுக்கான முத்து மணவறை, Fibre மணவறை என்வனவற்றை செய்து வழங்கியது.

சைவக்குருமார்களில் முதன்முதலாக இக்கலாபூஷண விருதைப் பெற்றுக் கொள்பவர் இவர் ஆவார். ஐயா அவர்களை கௌரவிக்க வேண்டுமெனும் பெருநோக்கோடு எமது ஆலயத்தினால் இக்கௌரவிப்பு விழா நடாத்தப்படுகின்றது. இவ்வேளையில் ஐயா அவர்கள் மேன்மேலும் இறைபணியாற்றி பல்லாண்டுகள் வாழ அரசடி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள்
ஆலய முதல்வர்
**16-01-2017** நாயன்மார்கட்டு. அரசடிப்பிள்ளையார் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்திற்கு பின்

வாழ்க்கையின் முடிவு மரணம் என்பது அனைவரும் அறிந்த விஷயம். மரணத்திற்குப் பின் என்ன? என்பதை யாரும் அறிவதில்லை.

விஷய ஞானம் இல்லாத இடத்தில் பயம், பீதி முதலிய மனக்கஷ்டங்கள் தோன்றுவது சகஜம்.

மரணம் என்று நினைக்கும் பொழுது மரணத்திற்குப் பின் என்ன நிகழ்கின்ற தென்ற சரியான அறிவில்லாததால் மரண பயம் உண்டாகின்றது.

மரணம் என்பது ஜீவனைப் பொறுத்தவரையில் புதிய சக்தியும், உற்சாகமும், புது ஆற்றல் திறமையும் உயிரில் உருவாகும் ஒரு புனிதமான நிகழ்ச்சி.

பகல் முழுவதும் உழைத்துக் களைப்படைந்தவர்களுக்கு இரவு உறக்கம் களை தீர்த்துப் புத்துணர்வும் தென்பும் அளிப்பது போன்று வாழ்நாள் முழுவதும் பல துறைகளிலும் செயலாற்றி வாழ்வில் களைப்படைந்த மனிதர்களுடைய ஜீவன் சுயமாகவே ஏற்றெடுத்த ஒரு தீர்க்க கால உறக்கம் அல்லது ஓய்வுதான் மரணம். ஜீவன் சிவத்துடன் ஐக்கியப்படுவதுதான் பிறவியின் நோக்கம் என்ற காரணத்தினால் ஜீவன் சுத்த சிவ நிலை அடையும் வரையும் பிறப்பு, இறப்பு என்பன நிகழ்ந்து கொண்டிருக்கும் உயிரைப்பற்றிய சில அடிப்படைத் தத்துவங்களைத் தெரிந்து கொள்ளும் பட்சத்தில் இவ்விஷயத்திலிருக்கும் பல சந்தேகங்கள் தீர்க்கப்பட்டு விடுகின்றன.

சுவாமி கெங்காதரானந்தா
(ஞான மண்டலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து
எங்கள் நல்வாழ்விற்காய் வழியமைத்து எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்தி 24.10.2017 அன்று
மீளாத்துயில் கொண்ட எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

**சிவஸ்ரீ. சதாசிவ ஐயர் தில்லைநாதன் ஐயா**

அவர்கள் சிவபதமடைந்த செய்தி அறிந்து நேரில்
வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி
மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும்,
கண்ணீர் அஞ்சலிகளை துண்டுப் பிரசுரம்
வெளியிட்டவர்களுக்கும், பதாகை (பெனர்)
வெளியிட்டவர்களுக்கும், பத்திரிகை மூலம்
அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நிகழ்வை
சிறப்பாக ஏற்பாடு செய்த அனைவருக்கும்
இரங்கலுரை ஆற்றிய அன்பர்களுக்கும் மேலும்
பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம். மேலும் அந்தியேட்டிக்
கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து
கொண்ட அனைவருக்கும் இம்மலரை அழகுற
அச்சமைத்து தந்த திருவள்ளுவர் அச்சகத்தினருக்கும்
எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஸ்ரீ ச .தில்லைந

*நமசிவாயம் ஐயா

*முத்துக்குமாரு ஐயா
+
*காவேரி

*ஏகாம்பரம் ஐயா
+
*தனபாக்கியம்

*மகாலட்சுமி
+
*வேதாரணியக்குருக்கள்

மதிரெத்தினம்
+
*திருஞானசம்பந்தர் ஐயா

சித்திராதேவி
+
பவாநந்தன் ஐயா

*தில்லையம்பலம் ஐயா
+
*தெய்வானைப்பிள்ளை

*சதாசிவம் ஐயா
+
*கண்ணம்மா, *அன்னலட்சுமி

*செல்லம்மா
+
*பாலசுந்தரக்குருக்கள்

லட்சுமிதேவி
+
*சண்முகாநந்தம் ஐயா

*செல்லையா
+
*நாகம்மா

*சண்முகரெத்தினம் ஐயா
+
தெய்வானைப்பிள்ளை

*இராமச்சந்திரக்குருக்கள்

*சே

*பாலசுந்தரக்

+
*செல்ல

*சண்முகநாதக் குருக்கள்
+
புவனேஸ்வரி அம்மா

சர்வேஸ்வரன்
சதானந்தசிவம்
சத்தியாகரன்

**தில்லைநாதன் ஐயா**

கணநாதன் ஐயா
+
*பாலாம்பிகை அம்மா

சற்குணதேவி
+
*செந்தில்நாத
ஐயா

சயந்தன் ஐய
பார்த்திபன்
சரவணன் ஐ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லநாதன் ஐயா வம்சாவழி

*சோதிலிங்கம் ஐயா + *சின்னம்மா

- ந்தரக்குருக்கள் + சல்லம்மா
- சரஸ்வதிதேவி
  - இரஜீந்திரன் ஐயா + புவனேஸ்வரி
    - சுதர்சன் ஐயா
    - வத்சலா
    - திலக்சனா
  - *விமலேந்திரன்
  - சுரேந்திரன் + லில்லி
    - டனிஸ்
    - ஹாசினி
    - குரு
  - *குலேந்திரன்
  - இந்திரன் + கயல்விழி
- *இராசலட்சுமி
  - அழகேசக்குருக்கள் + அனுஷா
    - சுகிர்தன் ஐயா
    - அமிர்தன் ஐயா
    - ஸ்ஹர்ணா
  - கேசவன் ஐயா + வினோதினி
    - மதுசூதனன்
    - சுபாங்கி

தேவி
+
ல்நாதன்
யா

ா ஐயா
தியன்
் ஐயா

* அமரர்களைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத் திவ்வுலகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் அச்சகம், 712, பருத்தித்துறை வீதி, நல்லூர்.